தினகரன்
விருதுநகர்

இந்தநாள்

- சோபகிருது வருடம் தை மாதம் 29-ம் நாள். திங்கட்கிழமை. வளர்பிறை.
- திதி: திருதியை மாலை 5.44 மணி வரை; அதன் பிறகு சதுர்த்தி.
- நட்சத்திரம்: பூரட்டாதி பகல் 2.56 வரை; அதன் பிறகு உத்திரட்டாதி.
- யோகம்: மரண யோகம்.
- நல்ல நேரம்: காலை 6.30 - 7.30; மாலை 4.30 - 5.30 மணி வரை.
- ராகு காலம்: காலை 7.30 - 9.00 மணி வரை.
- எமகண்டம்: காலை 10.30 - 12.00 மணி வரை.
- சந்திராஷ்டமம்: பூசம், ஆயில்யம்.
- சூலம்: கிழக்கு; பரிகாரம்: தயிர்.

வானிலை

இன்று		நாளை	
அதிகபட்சம்	குறைந்தபட்சம்	அதிகபட்சம்	குறைந்தபட்சம்
34.0C/94.0F	23.0C/74.6F	35.0C/95.0F	24.0C/76.0F

இன்று வானம் தெளிவாக காணப்படும்.

செல்போன் மோகம் பெற்றோர்களே உஷார்... பக்கம் 14

குடிநீர் விஸ்தரிப்பு பணிகளுக்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு பக்கம் 16

கீழடியை நினைவுபடுத்தும் வகையில்

ரூ.6.80 கோடியில் விருதுநகரில் அரசு அருங்காட்சியகம்

3 தளங்களில் அமைகிறது
அமைச்சர் அடிக்கல் நாட்டினார்

விருதுநகர், பிப். 12: கீழடி தொல்லியல் அருங்காட்சியகத்தை நினைவுபடுத்தும் வகையில் விருதுநகரில் ரூ.6.80 கோடி மதிப்பீட்டில் விருதுநகர் அருங்காட்சியகம் அமைப்பதற்கு அமைச்சர் தங்கம் தென்னரசு அடிக்கல் நாட்டினார். இது 17 ஆயிரம் சதுர அடியில் 3 தளங்களுடன் அமைய உள்ளது.

விருதுநகர் மாவட்ட விளையாட்டு அரங்கம் அருகில் ரூ.6.80 கோடி மதிப்பில் அரசு அருங்காட்சியகம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. கலெக்டர் ஜெயசீலன் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு அருங்காட்சியகத்திற்கு அடிக்கல் நாட்டினார். பின்னர் அமைச்சர் பேசியதாவது: விருதுநகர் மாவட்டத்திற்கு குறிப்பிட்டு சொல்லும் அமைப்பை நிறுவுவதில் பெரிய முன்னெடுப்பு நடத்தப்பட்டிருக்கிறது. கீழடி அருங்காட்சியகம் எப்படி கடல் தாண்டி இருக்கும் அனைத்து தரப்பு மக்களை இழுக்கிற முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருக்கிறதோ?, மதுரையின் வரலாற்றில் கீழடி அகழாய்வு தள அருங்காட்சியகம் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருக்கிறதோ அதுபோன்ற ஒரு அருங்காட்சியகம் விருதுநகரில் அமைய பெற வேண்டும், விருதுநகர் மாவட்ட வரலாறு என்ன, இந்த மாவட்டத்தின் வரலாறு எதுபற்றி சொல்கிறது, வாழ்ந்த மக்களின் நாகரிகம், பண்பாடு, அவர்களின் வாழ்க்கை முறை என்னவாக இருந்தது, வழிபாடு முறைகள், எந்த காலத்தில் இருந்து வாழ துவங்கி உள்ளனர் என்பதை ஒரு இடத்தில் காட்சிப்படுத்திடும் அருங்காட்சியத்திற்கு ரூ.6.80 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

▶ விருதுநகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விருதுநகர் அரசு அருங்காட்சியகம் அமைக்கும் பணிகளை அமைச்சர் தங்கம் தென்னரசு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

அதிமுக ஆட்சியில் நிதித்துறை பற்றாக்குறையை காரணம் காட்டி கைவிடப்பட்ட திட்டமாக விருதுநகர் அருங்காட்சியகம் இருந்தது. 2021ம் ஆண்டு ஆட்சி மாற்றத்திற்கு பிறகு கிடப்பில் இருந்த திட்டத்தை, முதல்வரிடம் எடுத்துரைத்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 3 தளங்களில் 17 ஆயிரம் சதுர அடியில் அமைய உள்ளது. மக்களை ஈர்க்கும் வகையில் இந்த அருங்காட்சியகம் இருக்கும். வெம்பக்கோட்டையில் அகழாய்வு நடந்து வருகிறது. கீழடி அருங்காட்சியகத்தை நினைவுபடுத்தும் வகையில் விருதுநகர் அருங்காட்சியகம் அமைய உள்ளது.

மேலும், திருவாங்கூர் மகாராஜா அரண்மனை போன்று அமைக்கப்படும். விருதுநகர் ஒரு காலகட்டத்தில் திருநெல்வேலி மாவட்டமாக இருந்தது. மாவட்டத்தில் பல இடங்களில் எடுக்கப்பட்ட சிலைகள், நடுகற்கள் அனைத்தும் இங்கு காட்சிப்படுத்தப்படும்.

பொதுப்பணித்துறையின் சார்பில் ஒரு வருடத்திற்குள் அருங்காட்சியகம் கட்டி முடிக்கப்படும். பொருநை அருங்காட்சியகம் திறக்க செல்லும் வழியில் விருதுநகர் அருங்காட்சியத்தையும் முதல்வர் திறந்து வகையில் விரைவில் கட்டி முடிக்கப்படும். என்றார். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அருங்காட்சியகம் அமைக்க வேண்டுமென இலக்கு நிர்ணயித்துள்ளோம். இவ்வாறு அமைச்சர் பேசினார். நிகழ்ச்சியில் நகர்மன்ற தலைவர் மாதவன், நகர செயலாளர் தனபால், திமுக வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ராஜகுரு, அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

திருத்தங்கல்லில் 17 ஆண்டுகளுக்கு பிறகு

கருநெல்லிநாதசுவாமி கோவில் கும்பாபிஷேகம்

ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்

சிவகாசி, பிப். 12: திருத்தங்கல் கருநெல்லிநாத சுவாமி கோவிலில் 17 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

சிவகாசி மாநகர் திருத்தங்கல்லில், பழமையான மீனாட்சி அம்பாள் உடனுறை கருநெல்லிநாதர் சுவாமி கோவில் உள்ளது. இந்தக் கோயில் கி.பி.1233ம் ஆண்டு பாண்டியர்களின் ஆட்சி காலத்தில் குருகுலத் திரயனால் கட்டப்பட்ட தாக கருதப்படுகிறது. இக் கோயிலில் கும்பாபிஷேகம் பணிகள் கடந்த ஆண்டு தொடங்கியது. கோவில் பராமரிப்பு பணிகள் முழுமையாக முடிந்த நிலையில் நேற்று காலை மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. முன்னதாக கடந்த 7ம் தேதி கணபதி ஹோமம், பூஜைகளோடு கும்பாபிஷேக பணிகள் தொடங்கியது. தொடர்ந்து முதற்கால யாகசாலை பூஜை, இரண்டாம் கால யாகசாலை பூஜை, மூன்றாம் கால யாகசாலை பூஜை, நான்காம் கால யாகசாலை பூஜை, ஐந்தாம் கால யாகசாலை பூஜை ஆகியவை நடைபெற்றது.

நேற்று காலை 6.15 மணிக்கு கும்பாபிஷேக காலம், யாகசாலை பூஜை நடைபெற்றது. இதில் மங்கள இசை, விக்னேஷ்வர பூஜை, கோ பூஜை, விசேஷ ஹோமம், தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து காலை 7.15 மணிக்கு உற்சவ சுவாமிகள் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு கும்பாபிஷேகம், காலை 9.15 மணிக்கு யாத்ராதானம், கடம் புறப்பாடு மற்றும் விமானங்கள் கும்பாபிஷேகம் மற்றும் மூலஸ்தான கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பின்னர் சிவாச்சாரியார்கள் கடத்தை சுமந்து கொண்டு கோயிலை சுற்றி வலம் வந்து வேத மந்திரங்கள் முழங்க கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது. புனித நீர் பக்தர்கள் மீது தெளிக்கப்பட்டது. தொடர்ந்து அலங்கார தீபாராதனை நடைபெற்றது. பின்னர் அன்னதானம் வழங்கப்பட்டது. சிவகாசி, திருத்தங்கல் மற்றும் சுற்றுபுற கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் பக்திப் பரவசத்துடன் பங்கேற்றனர்.

தொடர்ந்து மாலை 3 மணிக்கு மீனாட்சி அம்பாள் - கருநெல்லிநாத சுவாமி திருக்கல்யாணம், சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இரவு சுவாமி, அம்மன் மற்றும் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு நிகழ்ச்சி நடைபெற்றது. கும்பாபிஷேக ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் செய்திருந்தனர்.

கும்பாபிஷேக விழாவில் கோட்டாட்சியர் விஸ்வநாதன், மாநகராட்சி மேயர் சங்கீதாஇன்பம், துணை மேயர் விக்னேஷ்பிரியா காளிராஜன் மற்றும் மாநகராட்சி கவுன்சிலர்கள், திமுக நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திரபாலாஜி மற்றும் அதிமுக நிர்வாகிகள் மற்றும் திருத்தங்கல் மீனாட்சி அம்மாள் கோயில் பக்தர்கள் சபா திருப்பணி குழு பூமிநாதன், ரவிச்சந்திரன், சங்கர், மாரிமுத்து, சதாசிவம்போத்தி, பில்டிங் காண்டக்டர் ராஜேந்திரன், ராமர், சந்திரசேகர், ஜெயபாண்டிநாயுடு, பூக்கடை நந்தீஸ்வரன், பாலசுப்ரமணியன், ராஜேந்திரன், மணி கண்டன் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

மாநகர திமுக சார்பில் நீர்மோர் பந்தல்

திருத்தங்கல் கருநெல்லிநாதர் சுவாமி கோவில் மகா கும்பாபிஷேக விழாவையொட்டி சிவகாசி மாநகர திமுக 5வது வட்டம் சார்பாக நீர்மோர் பந்தலை மாநகர செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் நேற்று காலை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் முன்னாள் நகர்மன்ற துணைத்தலைவர் பொன்சக்திவேல், மண்டலகுழுத்தலைவர் குருசாமி, பகுதி கழக செயலாளர்கள் அ.செல்வம், கருணாநிதிப் பாண்டியன், திமுக கவுன்சிலர் சேதுராமன், மாவட்ட பிரதிநிதி ராஜேஷ், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் மணிமாறன், மாநகர துணை செயலாளர் ரவிச்செல்வம், கவுன்சிலர் அசோக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை 5வது வார்டு திமுக கவுன்சிலர் இந்திராதேவி மாரீஸ்வரன் செய்திருந்தார்.

▶ திருத்தங்கல் கருநெல்லிநாத சுவாமி கோவில் கும்பாபிஷேகம் விழாவில் கலந்து கொண்ட பக்தர்கள். உள்படம்: கலசங்களில் புனிதநீர் ஊற்றப்பட்டது. அடுத்தபடம்: சிவகாசி மாநகர திமுக சார்பாக மாநகர செயலாளர் எஸ்.ஏ. உதயசூரியன் பக்தர்களுக்கு நீர்மோர் வழங்கினார்.

கோவில் உண்டியல் திருட்டு

விருதுநகர், பிப். 12: விருதுநகர் மல்லாங்கிணறு ரோட்டில் கேகே எஸ்எஸ்என் நகரில் ஆதிபராசக்தி கோவில் உள்ளது. இந்தக் கோவிலில் ரத்தினகுமார்(33) என்பவர் பூசாரியாக இருந்து வருகிறார். சம்பவத்தன்று காலையில் கோயிலை திறந்து வைத்து விட்டு அருகில் உள்ள கடைக்கு சென்றார். திரும்பி வந்து பார்த்த போது அம்மன் சிலை அருகில் இருந்த உண்டியல் மற்றும் அம்மன் கழுத்தில் இருந்த ஐம்பொன் தாலி காணாமல் போயிருந்தது.

அதிர்ச்சியடைந்த அவர் இது குறித்து நிர்வாகிகளுக்கு தகவல் கொடுத்தார். கோவில் சிசிடிவி கேமரா பதிவை ஆய்வு செய்த போது, பைக்கில் வந்த 20 வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவர் கோயிலுக்குள் புகுந்த உண்டியல் மற்றும் அம்மன் கழுத்தில் இருந்த தாலியை திருடிசென்றது தெரிய வந்தது. இதுகுறித்து சூரல் போலீசில் பூசாரி ரத்தினகுமார் கொடுத்த புகாரில் உண்டியல் திருடனை போலீசார் தேடி வருகின்றனர்.

மாவட்டத்தில்

13 பிடிஓக்கள் இடமாற்றம்

அருப்புக்கோட்டை, பிப். 12: விருதுநகர் மாவட்டத்தில் ஒரே நாளில் 13 வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்த காஜாமைதீன்பந்தேநவாஸ் திருச்சுழி ஊராட்சி ஒன்றியத்திற்கும், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்த சூரியக்குமாரி விருதுநகர் ஊராட்சி ஒன்றிய கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலராகவும், திருச்சுழி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் செல்வராஜ் திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவராகவும், நரிக்குடி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் வாசுகி விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கண்காணிப்பாளராகவும், விருதுநகர் ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலர் நாகராஜ் விருதுநகர் உதவி இயக்குனர் ஊராட்சிகள் அலுவலக கண்காணிப்பாளராகவும், ராஜபாளையம் ஊராட்சி ஒன்றிய கிராம வட்டார வளர்ச்சி அலுவலர் ராமமூர்த்தி விருதுநகர் வட்டாரவளர்ச்சி அலுவலராகவும், திருவில்லிபுத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் சத்திய சங்கர் ராஜபாளையம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலராகவும், ராஜபாளையம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் வசந்தகுமார் வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலராகவும், பணியிடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கண்காணிப்பாளர் முத்துமாணிக்கம் ராஜபாளையம் ஊராட்சி ஒன்றிய கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலராகவும், சிவகாசி ஊராட்சி ஒன்றிய கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலர் சீனிவாசன் அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலராகவும், வட்டார வளர்ச்சி அலுவலராக விடுப்பில் இருந்த சிவக்குமார் சிவகாசி ஊராட்சி ஒன்றிய கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலராகவும், விருதுநகர் ஊராட்சி ஒன்றிய கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலர் கற்பகவல்லி நரிக்குடி ஊராட்சி ஒன்றிய கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலராகவும், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் ரவி அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலராகவும் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்
CIN.U67100TZ2014PTC020363
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028. மின்னஞ்சல்: karthi.govindasamy@omkaraarc.com,
அதிகாரப்பூர்வ அதிகாரி கைபேசி எண்: +91 98840 62068/+ 91 93446 84194

[பிற்சேர்க்கை–IV–A]
[விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் பொது அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தார்(கள்) மற்றும் ஜாமீன்தார்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஒஏ.ஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஒஏ.ஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 33/2020–21 பொறுப்பாட்சிமின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு எடெல்வீஸ் வீட்டுவசதி நிதி லிமிடெட் உரிமையீந்தோர் வசமிருந்து 30.03.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கினங்க, ஒஏ.ஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஒஏ.ஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழேக் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தார்(கள்) மற்றும் உப–கடன்தார்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஒஏ.ஆர்பிஎல்–க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடுசாரா அடிப்படை"யில்; சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தார்(கள்)/ ஜாமீன்தார்(கள்)/அடமானதார்(கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

கடன்தார்(கள்)/ ஜாமீன்தார்கள்/ அடமானதார்கள் பெயர்	திரு. M. கருப்பையா மற்றும் திருமதி K. மகாலட்சுமி
கடனீட்டுச் சொத்து விவரங்கள்	**ஆவணம் எண் 3129/2015 நாள் 22.06.2015 சார் பதிவாளர் அலுவலகம் சொக்கிக்குளம் மூலம் திரு. M. கருப்பையா, த/பெ. முத்துசாமி அவர்களுக்கு சொந்தமான சொத்து** மதுரை மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், சொக்கிக்குளம் சார் பதிவு மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், அயன் எண் 52, தத்தனேரி கிராமம்–மாநகராட்சி வார்டு எண்.8, அருள்தாஸ்புரம் நிலம் ஆனது சர்வே எண் 85 இல், மொத்தப் பரப்பளவு 84 சென்ட்களில், பரப்பளவு 2 சென்ட்கள் மேற்குப் பக்கத்தில் மேலும் மேற்கூறிய பரப்பில் கட்டப்பட்ட வீடுகளுள் கிழக்குப் பக்கத்தில் கதவு எண். 85 கொண்டிருக்கும் ஒரு வீடு, வரி மதிப்பீடு எண் 1322 இன்படி மதுரை மாநகராட்சி கதவு எண் 35, வீடு பின்வரும் எல்லைகள் கொண்டது: வடக்கு: கிழக்கு மேற்கு பாதை, கிழக்கு: முருகேசப் பிள்ளை வீடு, தெற்கு: சின்னசாமியின் வீடு, மேற்கு: மேற்கு பகுதியின் உள்ள வீடு. அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம் 16 அடி , தெற்குப் பக்கம் 16 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம் 40 அடி, கிழக்குப் பக்கம் 40 அடி–இவ்விதம் மொத்தப் பரப்பளவு 640 சதுரடி மேலும் அதில் கட்டப்பட்ட வீடு ஆனது அனைத்து பொருத்துதல்கள், சாதனங்கள் மேலும் மி.வா. எண் 05–041–002–134, 05–041–002–1199 மேலும் 05–041–002–1200 மூலம் மின் இணைப்புகள், மின்சார வாரிய வைப்புத்தொகை ஏனையவற்றுடன் கூடிய மதுரை மாநகராட்சி எல்லைகளுக்குள் அமைந்துள்ள சொத்து.
சொத்து உரிமையாளர்	திரு. M. கருப்பையா
கோரிக்கை அறிவிப்பு நாள்	28.09.2022
கையக சுவாதீனம் நாள்	03.01.2024
நிர்ணய விலை (இலட்சத்தில்)	ரூ.21,00,000/– (ரூபாய் இருபத்தொரு லட்சம் மட்டும்)
முன்வைப்புத் தொகை	ரூ.2,10,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து பத்தாயிரம் மட்டும்
ஏலம் உயர்த்தும் தொகை	ரூ.25,000/– (ரூபாய் இருபத்தைந்து ஆயிரம் மட்டும்)
சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	27.02.2024 முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை
10.02.2024 தேதியின்படி நிலுவைத் தொகை	ரூ.48,28,395/– (ரூபாய் நாற்பத்து எட்டு லட்சத்து இருபத்தெட்டாயிரத்து முந்நூற்று தொன்னூற்று ஐந்து மட்டும்)
கணக்கு விவரங்கள்:	கணக்கு எண்.344905000929, பயனாளரின் பெயர்: ஓம்காரா பிஎஸ் 22/2020–21 ட்ரஸ்ட், வங்கியின் பெயர்:ஐசிஐசிஐ பேங்க், கிளை: பாந்த்ரா (கிழக்கு), மும்பை, IFSC Code:ICIC0003449
மின்–ஏலம் நாள் & நேரம்	20 மார்ச் 2024 புதன் கிழமை முற்பகல் 11.00 முதல் நண்பகல் 12.00 வரை.
ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள்	18 மார்ச் 2024 பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக

ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை: விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோர் (ஒஏ.ஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குனர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பைப் படிக்கவும்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தார்(கள்) விற்பனை முடிவதும் முன்பு எந்த நேரத்திலும் இங்கே மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை 11.02.2024 முதலான மேற்கொண்டு வட்டி மற்றும் அனைத்து செலவுகள் கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் சேர்த்து செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்பதற்குரிய அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் மின்–ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடைபெறுவது குறித்து அவர்களுக்கு தெரிவிக்கும், கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) மேலும் பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் 30 (முப்பது) நாட்களுக்கு குறைவில்லாத ஒரு கட்டாய அறிவிப்பும் ஆகும். ஒருவேளை பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அதிகாரி/கடனீட்டுக் கடனீந்தோரின் விருப்ப உரிமையில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

(கார்த்தி கோவிந்தசாமி)
கைபேசி எண்.9344684194
அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்.,
(ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)

நாள்: 12.02.2024
இடம்: சென்னை